
தரம் 12

# முதலாந்தவணை

புறநானூறு



# தமிழ்

செய்யுள் இல - 72

A.Harichandran
CP/G/westhall National college
Kataboola
Nawalapitiya.

# புறநானூறு 72வது பாடல்

## அறிமுகம்

- சங்ககால புலவர்களால் பாடப்பட்ட நானூறு புறத்திணைப் பாடல்களின் தொகுப்பே புறநானூறு ஆகும். வீரம், போர், கொடை, அறம், மன்னர்களின் புகழ் மற்றும் நிலையாமை போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்ட இப்பாடல்கள் சங்ககால மக்களின் வாழ்வியலைக் கவித்துவத்துடன் பதிவு செய்துள்ளன.
- முரசொடு கைப்பற்றுவேன் என்ற 72வது புறநானூற்று பாடல் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் எனும் பாண்டிய மன்னனால் பாடப்பெற்றது.
- இம்மன்னன் மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியின் பாட்டுடைய தலைவன் ஆவான்.
- புறநானூற்றில் இவனைப் பற்றிய 10 செய்யுள் உள்ளன.
- பரணர், கல்லாடனார் போன்ற 20 புலவர்கள் புறநானூற்றில் இவனைப் பாடியுள்ளனர்.

- இப்பாடலின் பாடுபொருளானது பாண்டியன் நெடுஞ்செழியனின் வஞ்சினம் கூறுதலே பாடுபொருளாக சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் அவனை எதிர்த்த மன்னர்கள் கூறிய ஏளனச் சொற்களும் அதற்கு மறுதலையாக நெடுஞ்செழியனின் வஞ்சின சொற்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- இச்செய்யுள் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாதெனின் பாண்டிய மன்னனுக்கும் பகை அரசர்கள் எழுவருக்கும் இடையில் தலையாலங்கானம் என்னுமிடத்தில் கடும் போர் மூண்டது. பகை அரசர்கள் போர்க்களத்தில் எதிர்படக் கூறிய புல்லிய வார்த்தைகளை பெறாது கடும் கோபமுற்று வெகுளியும் எள்ளலும் வெளிப்படுவதாகிய வஞ்சின வார்த்தைகளால் பாடப்பெற்றதே இச்செய்யுள் ஆகும்.

| | | |
|---|---|---|
| திணை | - | காஞ்சி |
| துறை | - | வஞ்சினக் காஞ்சி |
| புலவர் | - | தலையானங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் |

## புறநானூறு -72

நகுதக் கனரே, நாடுமீக் கூறுநர்
இளையவன் இவன் என உளையக் கூறி,
படு மணி இரட்டும் பா அடிப் பனைதாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படை அமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கி
சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அரும் சமம் சிதய தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின் பொருந்திய

என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது
கொடியன் எம் இறை என கண்ணீர் பரப்பி
குடி பழி தூற்றுங் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலையை பலர் புகழ் சிறப்பில்
புலவர் பாடாது வரைக என் நில வரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே.

நகுதக் கனரே, நாடுமீக் கூறுநர்

இளையவன் இவன் என உளையக் கூறி,

படு மணி இரட்டும் பா அடிப் பனைதாள்

நெடுநல் யானையும் தேரும் மாவும்

படை அமை மறவரும் உடையம் யாம் என்று

உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கி

சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை

அரும் சமம் சிதைய தாக்கி முரசமொடு

ஒருங்கு அகப்படேன் ஆயின் பொருந்திய

என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது

கொடியன் எம் இறை என கண்ணீர் பரப்பி

குடி பழி தூற்றுங் கோலேன் ஆகுக

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவனாக

உலகமொடு நிலையை பலர் புகழ் சிறப்பில்

புலவர் பாடாது வரைக என நில வரை

புரப்போர்க்கு புன்கண் கூர

இரப்போர் ஈயா இன்மையான் உறவே.

‘அ’ பகுதியில் உள்ள சொற்களுக்கு பொருத்தமான அரும்பதங்களை ‘ஆ’ பகுதியிலிருந்து தெரிவு செய்து தொடர்புபடுத்துக.

| அ | ஆ |
|---|---|
| 1. மீக்கூறுனர் | வருத்த |
| 2. நகுதக் கனரே | உயர்வாக பேசுபவர்கள் |
| 3. உளைய | நகைப்புக்குறியவர் |
| 4. படுமணி | பரந்த பாதம் |
| 5. இரட்டும் | காலாட்படை/படைவீரர்கள் |
| 6. பா அடி | யானையின் இருபக்கமும் கட்டபட்டுள்ள மணிகள் |
| 7. பணைத்தாள் | குதிரை |
| 8. நெடு | ஒலிக்கும் |
| 9. மா | பெரிய கால் |
| 10.மறவர் | உயர்ந்த |

| | |
|---|---|
| 11. சினம் | வலிமை |
| 12. சிறு சொல் | ஆதரித்து காக்கப்படுவோர் |
| 13. சமம் | அரசர் |
| 14. வேந்தர் | உயர்ந்த |
| 15. அப்பு | போர் |
| 16. புரப்போர் | ஏளனமான வார்த்தை |
| 17. ஓங்கிய | கோபம் |
| 18. கேள்வி | யாசிப்பவர் |
| 19. நிலை இய | வழங்க முடியாத |
| 20. நிலவரை | வலிமை |
| 21. இரப்போர் | புலமை |
| 22. ஈயா | நிலைபெற்ற |
| 23. துப்பு | நாட்டின் எல்லையை |

03. பின்வரும் கூற்றுக்கள்சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளமிடுக.

1. இச்செய்யுள் பாண்டியன் நெடுஞ்செழியனின் வஞ்சினம் கூறுதலே பாடுபொருளாக சிறப்பிக்கப்பட்டுள்ளது. ( ✓ )

2. இப்பாடுபொருளில் எதிர்த்த மன்னர்கள் கூறிய ஏளனச் சொற்களும் அதற்கு மறுதலையாக நெடுங் செழியனின் வஞ்சினச் சொற்களும் வெளிப்படவில்லை. ( ✗ )

3. இவனுடைய நாட்டை உயர்த்தி பேசுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள், ''இவன் மிகவும் இளையவன்'' என்றெல்லாம் மனம் நோகும் படி சினம் கொண்ட அரசர்கள் கூறினார்கள். ( ✓ )

4. நெடுஞ் செழியனை இழிவாக பேசிய அரசர்கள் இரு புறங்களும் மணிகள் ஒலிக்கும், பரந்த காலடிகளையும், பருத்த கால்களையுடைய யானைப் படையை உடையவர்கள். ( ✓ )

5. பாண்டியன் நெடுஞ் செழியனை செருக்கோடு ஏளன வார்த்தைகளை பேசிய அரசர்கள் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, ஆயுதம் தாங்கிய காலாட்படை ஆகியவற்றை கொண்டிருக்கவில்லை. ( ✗ )

6. சினம் மிகுந்த அரசர்களை அரிய போரிலே சிதறும் படியாக தாக்கி, அவர்களது முரசோடு அவர்களையும் ஒன்றாக கைப்பற்றுவேன் என பாண்டியன் நெடுஞ்செழியன் கூறினான். ( ✓ )

7. அரசர்கள் பாண்டிய நெடுஞ்செழியனின் குறைகளை கூறுவதனூடாகவும் தங்களுடைய பெருமைகளை கூறுவதனூடாகவும் இழிவுபடுத்துகின்றனர். ( ✓ )

8. நான் பகை மன்னர்களை அழிக்கவில்லையாயின் எனது ஆட்சி பாதுகாப்பில் வாழும் குடிமக்கள், சென்று வாழ்வதற்கு வேறு இடம் இன்மையால் “கொடியவன் எங்கள் அரசன்” என கண்ணீர்விட்டு பழிச்சொல்லித் தூற்றுகின்ற கொடுங்கோலன் ஆவேன். என நெடுஞ்செழியன் கூறினான். ( ✓ )

9. உயர்ந்த சிறப்பினையும், மேம்பட்ட புலமையையும் உடைய மாங்குடி மருதனை தலைவனாக கொண்டு உலகம் உள்ளவும் நிலைபெற்ற பலராலும் புகழப்படும் சிறப்பினை உடைய புலவர்கள் என் நாட்டின் எல்லையை புகழ்ந்து பாடட்டும் என நெடுஞ்செழியன் கூறினான். ( ✗ )

10. என்னால் பாதுகாக்கப்படுவோர் துயருறுமாறு என்னிடம் இரப்போருக்கு ஒன்றும் ஈயாதவாறு வறுமை வந்து என்னை சேரட்டும் என நெடுஞ்செழியன் கூறினான். ( ✓ )

## 04. சுருக்கமான விடை எழுதுக.

1. இப்பாடலின் பாடுபொருள் வெளிப்படுத்தும் விடயம் யாது?

   எதிர்த்த மன்னர்கள் கூறிய ஏளனச் சொற்களும் அதற்கு மறுதலையாக நெடுஞ்செழியனின் வஞ்சின சொற்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2 இப்பாடலில் வெளிப்படும் முக்கிய அம்சங்கள் எவை?

- பாண்டிய நெடுஞ்செழியனின் தன்மான உணர்வும் வீரமும்
- பெரியவர்களின் புகழுக்கு உரியவராதலின் சிறப்பு
- குடிகளை காப்பதில் அரசருக்கு இருக்க வேண்டிய கடமையுணர்வு
- புலவர்கள் ஓர் அமைப்பாக விளங்கியமை.

3. பாண்டிய நெடுஞ்சழியனை இழிவான முறையில் கூறிய வார்த்தைகள் எவை?

   இவனுடைய நாட்டினைப் புகழ்ந்து பேசுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள் என்றும், இவன் மிகவும் இளையவன் என்றும் பேசினார்கள்.

4. அரசர்களிடம் காணப்பட்ட யானைப்படையின் சிறப்புக்கள் எவை?

ஒலியெழுப்பும் மணிகள் இருபுறமும் கட்டப்பட்டதும் பரந்த அடியோடு கூடிய பருத்த காலை உடையதுமான உயர்ந்த யானைப்படை

5. நால்வகை படைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

- யானைப்படை
- குதிரைப்படை
- தேர்ப்படை
- ஆயுதம் தாங்கிய வீரர்களைக் கொண்ட காலாட்படை

6. தன்னை இழிவான முறையில் பேசிய அரசர்களுக்கு நெடுஞ்செழியன் கூறிய வஞ்சின வார்த்தைகள் எவை?

சினம் மிகுந்த அரசர்களை அரிய போரில் தாக்கியழித்து அவர்களது முரசங்களுடன் அவர்களையும் ஒன்றுசேர கைப்பற்றுவேன் எனக் கூறல்.

7. செருக்கோடு ஏளன வார்த்தைகளைப் பேசிய அரசர்களை அழிக்காது விட்டால் யாது நிகழும் என நெடுஞ்செழியன் கூறினான்.?

- எனது ஆட்சி பாதுகாப்பில் வாழும் குடிமக்கள் சென்று வாழ்வதற்கு பாதுகாப்பான இடம் இல்லாது “கொடியவன் எங்கள் அரசன்” என கண்ணீர்விட்டு தூற்றுகின்ற கொடுங்கோலன் ஆவேன்.
- புலவர்களால் என் நாட்டு எல்லை பாடப்படாததாக ஆகிவிடும்.
- இரப்பவர்களுக்கு எதனையும் கொடுக்க முடியாதவாறு வறுமை என்னை சேரட்டும் எனக் கூறினான்.

8. இந்நாட்டு புலவர்களின் சிறப்பு யாது?

உயர்ந்த சிறப்பினையும், மேம்பட்ட புலமையும் உடைய மாங்குடி மருதனைத் தலைவனாக உடைய உலகத்தோடு நிலைபெற்ற பலராலும் புகழப்படுகின்ற சிறப்பினை உடைய புலவர்கள்.

9. சிறந்த மன்னனது செங்கோலின் இயல்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

- சிறந்த மன்னனது நாட்டு மக்கள் தம் மன்னனை புகழ்வர்.
- புலவர்கள் நாட்டின் மீது புகழ்ந்து பாடல் இயற்றுவர்.
- மக்களுக்கு கொடுக்கக் கூடிய வளமான நாடாக காணப்படும்.

10. பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

ஏளனமான சொற்களால் பேசிய சினம் மிகுந்த அரசர்களை அரிய போரிலே சிதறும் படியாக தாக்கியழித்து முரசங்களுடன் அவர்களையும் கைப்பற்றுவேன் எனக் கூறுவதன் மூலம்.

11. பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வு இச்செய்யுளில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

- போரில் தோற்கடிக்கப்படுவனாயின் என் மக்கள் பாதுகாப்பாக வாழ இடமின்றி பழிசொல்லி, தூற்றுகின்ற கொடுங்கோலன் ஆவேன்.
- புலவர்களால் எந்நாடு பாடப்படாததாக ஆகுக.
- எதையும் கொடுக்க முடியாத வறுமை என்னை வந்து சேரட்டும்

போன்றவாறு கூறுகின்ற தன்மையினடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

12. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் பகை அரசர்களுக்கும் எந்த இடத்தில் கடும் போர் மூண்டது?

தலையாலங்கானம் என்னுமிடத்தில்.

13. இச்செய்யுளில் இடம்பெறும் புறத்திணை பண்புகள் 04 தருக.

- மன்னன் பெயர்சுட்டிப் பாடப்படுதல்.
- மன்னனின் வீரம், தன்மான உணர்வு பாடப்பட்டிருத்தல்.
- சிறந்த ஆட்சிக்குரிய பண்புகள் கூறப்பட்டிருத்தல்.
- இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருத்தல்.

14. இச்செய்யுளின் திணை, துறை என்பவற்றை தருக?

திணை - காஞ்சி

துறை - வஞ்சினக் காஞ்சி

15. செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்புக்கள் மூன்று தருக.

- மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவன்
- தந்தை இறந்த பின் சிறுவயதிலேயே முடி சூடியவன்.
- தலையாலங் கானத்து போரினால் சிறப்படைந்தவன்.

## பயிற்சி வினாக்கள்

1. நெடுஞ்செழியனை இகழ்ந்து பேசி, தலையாலங்கானம் எனுமிடத்தில் போர் செய்து நின்றவர்கள் யாவர்?

2. மன்னனுக்கு எவை எல்லாம் இழிவை ஏற்படுத்தக்கூடியவை?

3. இப்பாடலில் அரசனின் வெஞ்சினமும், தன்மான உணர்வும் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

4. பகைவர்கள் கூறிய இழிமொழிகள் எவை?

5. நகுதக் கனரே...... என்ற செய்யுளின் பொருளைத் உமது மொழிநடையில் எழுதுக?